## September 25, 2025 - தினமணி செய்தித்தாள் - சிறு துணுக்கள்

1. இங்கிலாந்தை சேர்ந்த பிரபல கிரிக்கெட் நடுவரான ஹரால்டு டிக்கி பேர்டு (92) காலமானார்.
2. இந்த ஆண்டின் மிக வலிமையான புயலாக அறியப்படும் ராகசாவால் பிலிப்பின்ஸிலும் தைவானிலும் 27 பேர் உயிரிழந்தனர். சூறைக்காற்று மற்றும் வெள்ளப் பெருக்கால் இந்த உயிரிழப்புகள் ஏற்பட்டதாக அதிகாரிகள் கூறினர்.
    i. அந்தப் புயல் தெற்கு சீனாவின் ஹைலிங் தீவை தாக்கியது. ஜியாங்மென் நகரில் மணிக்கு 241 கி.மீ வேகத்தில் சூறைக் காற்று பதிவானதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்தது.
3. உளுந்து, பச்சைப் பயறுக்கு குறைந்தபட்ச ஆதரவு விலையை நிர்ணயம் செய்து தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது.
    i. அறுவடை காலங்களில் ஏற்படும் விலை வீழ்ச்சியால், விவசாயிகளின் வாழ்வாதாரம் பாதிப்படையாமல் இருக்கவும், அவர்களின் நலனைப் பாதுகாக்கும் வகையிலும் விலை ஆதரவுத் திட்டத்தின் கீழ் விவசாயிகளிடமிருந்து உளுந்து, பச்சைப்பயறு ஆகியவை குறைந்தபட்ச ஆதரவு விலையில் தமிழக அரசால் நேரடியாக கொள்முதல் செய்யப்படுகிறது.
4. லடாக்கில் நடைபெற்ற வன்முறைக்கு சமூக ஆர்வலர் சோனம் வாங்சுக்கின் ஆத்திரமூட்டும் பேச்சுகள்தான் காரணம் என்று மத்திய அரசு குற்றஞ்சாட்டியது.
    i. இதுதொடர்பாக மத்திய உள்துறை அமைச்சகம் வெளியிட்ட செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டதாவது: அரசமைப்புச் சட்டத்தின் 6-ஆவது அட்டவணையின் கீழ் லடாக்கை சேர்க்க வேண்டும், லடாக்குக்கு மாநில அந்தஸ்து வழங்க வேண்டும் ஆகிய கோரிக்கைகளை முன்வைத்து கடந்த செப்.10-ஆம் தேதிமுதல் சமூக ஆர்வலர் சோனம் வாங்சுக் உண்ணாவிரத போராட்டத்தில் ஈடுபட்டு வந்தார்.
    ii. இந்த விவகரங்கள் தொடர்பாக லடாக்கின் லே மற்றும் கார்கில் பகுதிகளைச் சேர்ந்த லே உச்சநிலை அமைப்பு (எல்ஏபி), கார்கில் ஜனநாயக கூட்டணி (கேடிஏ) ஆகியவற்றுடன் மத்திய அரசு பேச்சுவார்த்தை நடத்தி வந்தது. உயர் அதிகார குழு, துணைக் குழு மூலம் தொடர் கூட்டங்கள் நடத்தப்பட்டன.
    iii. இந்தப் பேச்சுவார்த்தையின் பலனாக, லடாக் பழங்குடியினருக்கான இட ஒதுக்கீடு 45 சதவீதத்தில் இருந்து 84 சதவீதமாக அதிகரிக்கப்பட்டது. லடாக் தன்னாட்சி மலை மேம்பாட்டு கவுன்சில்களில் பெண்களுக்கு மூன்றில் ஒரு பங்கு இடஒதுக்கீடு வழங்கப்பட்டது.
    iv. அங்கு பேசப்படும் போதி மற்றும் புர்கி மொழிகள் அலுவல் மொழிகளாக அறிவிக்கப்பட்டன. அத்துடன் 1,800 அரசுப் பணியிடங்களுக்கான ஆள்தேர்வும் தொடங்கப்பட்டது.
5. வணிக நிறுவனங்கள் மற்றும் வரித் துறை இடையிலான சச்சரவுகளுக்கு விரைந்து தீர்வு காணும் நோக்கில், புது தில்லியில் ஜிஎஸ்டி மேல் முறையீட்டுத் தீர்ப்பாயத்தை (ஜிஎஸ்டிஏடி) மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் முறைப்படி தொடங்கிவைத்தார். இந்தத் தீர்ப்பாயத்தில் நிகழாண்டு டிசம்பரில் விசாரணைகள் தொடங்கும் என்றும் அவர் தெரிவித்தார்.
6. உலகக் கோப்பை ஜூனியர் ஹாக்கி போட்டியை சிறப்பாக நடத்த தமிழக அரசு ரூ.100 கோடி நிதி ஒதுக்கீடு செய்துள்ளதாக துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் தெரிவித்தார்.
    i. தமிழகத்தில் முதல் முறையாக உலகக் கோப்பை ஜூனியர் ஹாக்கி போட்டி வருகிற நவ. 28 முதல் டிச.10 வரை நடைபெறவுள்ளது. இந்தப் போட்டியில் 29

நாடுகளைச் சேர்ந்த விளையாட்டு வீரர்கள் பங்கேற்க உள்ளனர்.

ii. உலகக் கோப்பை ஜூனியர் ஹாக்கி போட்டியை சென்னை, மதுரையில் சிறப்பாக நடத்த தமிழக அரசு ரூ.100 கோடி ஒதுக்கீடு செய்துள்ளது.

7. கன்னட இலக்கியவாதி எஸ்.எல்.பைரப்பா காலமானார்.
8. ஜம்மு-காஷ்மீரில் கடந்த 2021-ஆம் ஆண்டிலிருந்து காலியாக உள்ள 4 மாநிலங்களவை எம்.பி. இடங்களுக்கு அக்டோபர் 24-இல் தேர்தல் நடைபெறும் என்று தேர்தல் ஆணையம் அறிவித்தது.
   i. கடந்த 2019-இல் ஜம்மு-காஷ் மீரின் சிறப்பு அந்தஸ்து ரத்து செய்யப்பட்டு, இரு யூனியன் பிரதேசங்களாக (ஜம்மு-காஷ் மீர், லடாக்) பிரிக்கப்பட்டது. சட்டப் பேரவையுடன் கூடிய யூனியன் பிரதேசமான ஜம்மு- காஷ்மீரில் குடியரசுத் தலைவர் ஆட்சி நீடித்து வந்த நிலையில், கடந்த ஆண்டு பேரவைத் தேர்தல் நடத்தப்பட்டது.